RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1347

OPEN ACCESS

# ஐங்குறுநூறு குறிஞ்சித்திணையில் தலைவி கூற்று பாடல்களில் மெய்ப்பாடுகள்

ஞா. கலையரசி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம்-637404., தமிழ்நாடு, இந்தியா.

# The Truths in the Songs of the Woman's Statement in Ainkurunooru Kurinjithinai

G. Kalaiarasi [a, *]

[a] Department of Tamil, Government Arts and Science Collage, Vettukkadu, Senthamangalam–637404, Tamil Nadu, India

* Corresponding Author: vinayagasakthi@gmail.com

Received: 21-06-2022
Revised: 13-08-2022
Accepted: 27-08-2022
Published: 28-11-2022

Check for updates

**ABSTRACT**

Ainkurunooru of the Sangam literature has the lowest number of feet. This book serves as a mirror to capture the events that take place in the lives of similar people who are in love. In it, there are twenty-one songs sung by Kapilar in Kurinjithinai songs, which are composed of the woman's statements. The songs are full of reality and show the events that take place in the mind. Among the realities mentioned by the Tolkappiar are the reality of crying, with movement as the stationary field the reality of lightness is because of tenderness, and the reality of fear in the substance of its God The reality of pride is centered on the truth in the materiality of innocence. In this article, it has been explained and examined that the reality of the ego is also based on perception.

**Keywords:** Ainkurunooru, Sangam literature, Tolkappiar, Truth

## முன்னுரை

மெய்யின் கண் தோன்றும் உணர்வுகளை மெய்ப்பாடு என்று கூறுவர். அதாவது மனதில் நிகழும் நிகழ்ச்சியை உடல்மொழியால் வெளிப்படுத்துவதே மெய்ப்பாடு என்பர். இம்மெய்ப்பாடு தோன்றப் பல புலவர்கள் பாடல்களை விதந்து ஓதியுள்ளனர். அவற்றுள் குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாட வல்லவரான கபிலர் பல வகையான மெய்ப்பாடுகள் தோன்றப் பாடியுள்ளார் என்றால் மிகையாகாது. செவ்வியல் இலக்கியத்தில் ஒன்றான எட்டுத்தொகை, ஐங்குறுநூறு பாடல்களில் கபிலரால் பாடப்பட்ட குறிஞ்சித் திணைப் பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் தலைவி கூற்று அமைந்த பாடல்களில் மெய்ப்பாடுகளை மட்டும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மெய்ப்பாடு

உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடு உடலில் தெரிவது மெய்ப்பாடு எனலாம். “மெய்ப்பாடு என்பது அகவுணர்வுகளை ஆழ்ந்து ஆராயாமலே யாரும் இனிதறிப் புலப்படுத்தும் இயற்புற உடற்குறியாம்.” என்று சோமசுந்தர பாரதியும் (Sundaramorrthi, 1975), “அகம் அது உண்மை அது பாய்ந்து உள்ளே நிறைவது சுவை ஆம் சுவையது நிரம்பி மெய்வழி வழிதல் மெய்ப்பாடு ஆமே.” என்று கூத்து நூலும்

“உண்ணிகழ் தனிமை புறத்துத் தோன்ற

எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே” (Sundaramorrthi, 1987)

என்று தண்டியலங்காரமும்,

“உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்

மெய்ப்பட முடிவது மெய்ப்பா டாகும்”

என்று தொல்காப்பியமும் மெய்ப்பாட்டிற்கு இலக்கணம் கூறுகிறது (Ilampuranar, 2005).

## எண்வகை மெய்ப்பாடுகள்

“நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று

அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப”

என்று மெய்ப்பாடு எட்டு வகைப்படும் என்றும் அவை எட்டும் 32 ஆகப் பாகுபடுத்தலாம் என்பதையும் தொல்காப்பியத்தின் வழி அறிய முடிகிறது (Ilampuranar, 2005).

## தலைவி கூற்றுப் பாடல்கள்

ஐங்குறுநூற்றில் குறிஞ்சித் திணைப் பாடல்களில் தலைவி கூற்றுப் பாடல்களாக இருபத்தொரு பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

## அழுகை என்னும் மெய்ப்பாடு

“இழிவே இழவே அசைவே வறுமையென

விளிவில் கொள்கை அழுகை நான்கே”

என்ற நான்கு காரணங்களால் அழுகை ஒருவருக்குத் தோன்றும் என்று தொல்காப்பிய நூற்பா சான்று பகர்கின்றது. இவ்வகை அழுகை மெய்ப்பாடு ஐங்குறுநூற்றில் பல இடங்களில் காணப்படுகிறது (Pulurkesigan, 2019).

## அசைவின் காரணமாகத் தோன்றும் அழுகை

அசைவு என்பதற்கு “பண்டை நிலைமை கெட்டு வேறொருவராகி வருந்துதல்” என்று பேராசிரியர் தன்னுடைய உரையில் விளக்கம் தருகின்றார் (Perasiriyar, 2017).

‘கட்டளை அன்ன மணிநிறந் தும்பி

தட்டை தண்ணுமைப் பின்ன ரியவர்

தீங்குழ லாம்பனி ணிணிய விமிரும்

புதன்மலர் மாலையும் பிரிவோ

தெனினும் மாலையும் பிரிவோ’

இப்பாடலில் தலைவி பகற்குறியின் கண் மட்டுமல்லாமல் இரவுக்குறியிலும் தலைவனைக் காண வேண்டும் என்று விரும்பினாள் (Pulurkesigan, 2019). தலைவன் தலைவியைக் காண வந்தான். சிறிது நேரம் கழித்துப் பிரிந்து சென்றான். தலைவி அச்சிறு பிரிவை ஏற்காது வருந்தினாள் என்று

கூறும் மேற்கண்ட பாடலில் அசைவு என்னும் பொருண்மையில் அழுகை என்னும் மெய்ப்பாடு வெளிப்படுகிறது.

'அம்ம வாழி தோழி நன்மலை

மணிநிறங் கொண்ட மாமாலை வெற்பிற்

நுனி நீ ரருவி நம்மோ பாட

லெளிய மன்னா லவர்க்கினி

யரிய மாருதன் மருண்டெடென் யாளே'

இப்பாடலில் தலைவனின் பிரிவானது தலைவிக்கு அழுகையைத் தோற்றுவிப்பதாக அமைகிறது. தலைவியின் சுற்றத்தார் அவளை புறம் போகாதவாறு காவல் செய்தனர் என்பதனை தலைவனுக்கு உரைத்தாள் தோழி (Pulurkesigan, 2019). தலைவி தன்னால் துன்பப்படுகிறாள் என்பதனை உணர்ந்தான் தலைவன். இங்குத் தலைவியின் சுற்றத்தார் அவளைக் காவல் செய்தமையால் தலைவனைக் காணாது வருத்தம் கொள்வதால் அழுகை மெய்ப்பாடு பிறக்கிறது.

'அம்ம வாழி தோழி காதலர்

பாவை யன்னவென் ணாய்கவின் றொலைய

நான்மா மேனி பசப்ப

செல்வ லென்பதம் மலைகெடு நாம்'

இப்பாடலில் தலைவன் தலைவியை வரைந்து கொள்ளுதல் காரணமாக அவளை விட்டுப் பிரியக் கருதுகிறான் (Pulurkesigan, 2019). தலைவன் தான் வரும் வரை ஆற்றி இருக்கும்படி கூறிவிட்டுச் செல்கின்றான். தன் தலைவனின் பிரிவை நினைத்து தலைவி வருந்தி அழுவதாக இப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பாடலில் அழுகை என்னும் மெய்ப்பாடு வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

## இளிவரல் என்னும் மெய்ப்பாடு

மூப்பு, நோய், வருத்தம், மென்மைத் தன்மை ஆகிய நான்கு இடங்களிலும் இளிவரல் பிறக்கும் என்பதை,

"மூப்பே பிணியே வருத்த மென்மையோடு

யாப்புற வந்த இளிவரல் நான்கே"

என்ற நூற்பாவால் தொல்காப்பியர் பறைசாற்றுகிறார் (Ilampuranar, 2005).

## மென்மையால் தோன்றும் இளிவரல்

மென்மை என்பதற்கு "பிறர் செருக்கோடும் செல்வசெழிப்போடும் இருக்கும்போது இவை இல்லாத எளிமை நமக்கு இளிவரலை வரவைக்கும்" என்று, மென்மை என்பதற்கு நல்குரவு (வறுமை) என்று இளம்பூரணரும் "தன்கண்ணும் பிறர்கண்ணும் தோன்றிய மென்மை" என்று பேராசிரியரும் விளக்கம் கூறுகின்றனர் (Perasiriyar, 2017). ஐங்குறுநூற்றில் மென்மை காரணமாக இளிவரல் மெய்ப்பாடு தோன்றுவதாக ஒரே ஒரு பாடல் மட்டும் அமைகிறது. அப்பாடல்,

'குன்றக் குறவன் காதல் மடமகன்

வண்டுபடு கூந்தற் றண்பழைக் கொடச்சி

வளையன் முனைவா ளெயிற்றி

ளிளைய ளாயிறு மாரணங் கினனே'

இப்பாடலில் இயற்கைப் புணர்ச்சியும், இடந்தலைப்பாடும் நிகழ்ந்த பின்னர் தோழியின் துணை கொண்டு தலைவியைக் காண முயல்கின்றான் தலைவன். தோழி தலைவியின் இளமைத் தன்மையைக் கூறி தலைவனைக் குறை கூறுகிறாள் (Pulurkesigan, 2019). இங்குப் பேராசிரியர் குறிப்பிடும் மென்மை (இளமை) தன்மை புலப்பட இளிவரல் என்னும் மெய்ப்பாடு தோன்றுகிறது. அதாவது இளிவரல் என்னும் மெய்ப்பாட்டிற்கு நிலைக்களனாக 'மென்மை' அமைகிறது.

அச்சம் என்னும் மெய்ப்பாடு

"அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்

பிணங்கல் சாலா அச்சம் நான்கே."

என்ற இந்நூற்பாவை ஆராயுங்கால், அணங்கு, விலங்கு, கள்வர் தன்னுடைய கடவுள் போன்றவற்றின் காரணமாக அச்சம் தோன்றலாம் என்பது புலப்படுகிறது (Ilampuranar, 2005).

'அம்மா வாழிவேண் டன்னைன யென்னை

தானு மலைந்தா னெமக்குத் தழையாயின்

பொன்வீ மணியரும் பினவே

யென்னை மரங்கெலவர் சாரல்வே'

என்ற பாடலில் தலைவியை அயலார் மணம் பேச வந்தனர். இதனால் தலைவிக்கு அச்சம் உருவாவதால் இப்பாடலில் அச்சம் என்னும் மெய்ப்பாடு அமையப்பெற்றுள்ளது (Pulurkesigan, 2019).

## பெருமிதம் என்னும் மெய்ப்பாடு

"கல்வி தருகண் புகழ்மை கொடையெனச்

சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

என்ற நான்கின் அடிப்படையில் பெருமிதம் தோன்றும் (Ilampuranar, 2005).

## தறுகண்மையால் தோன்றும் பெருமிதம்

தறுகண்மை என்பது அஞ்ச வேண்டிய இடத்தில் அஞ்சாமல் இருத்தல் என்று பேராசிரியரும், உள்ளத்தின் கண் காணப்படும் வீரம் என வெள்ளைவாரணரும் குறிப்பிடுகின்றனர்.

'குன்றக் குறவன் புல்வேய் குரம்பை

மன்றோ பிளமழை மறைக்கு நாடன்

புறையோன் வாழி தோழி உரையெய

லரும்பனி யளைஇய கூதிர்ப்

பெருந்தன் வாடையில் முற்று வந்த தனனே'

என்ற குறிஞ்சித்திணைப் பாடலை ஆராயும் பொழுது தலைவன் வரைவதற்குத் தேவையான பொருட்களை ஈட்டி வருவேன் என்று கூறிச் சென்றான் (Pulurkesigan, 2019). அவ்வாறு கூறிச் சென்ற தலைவன், குறித்த பருவத்திற்கு முன்னரே வந்துவிடுகிறான். இச்செய்தியினை அறிந்த தலைவி, தலைவனின் தறுகண் பண்பினை எடுத்துரைக்கும் விதத்தில் அமைந்த மேற்கண்ட பாடல் பெருமித மெய்ப்பாட்டோடு விளங்குகிறது.

தலைவனோடு தலைவி உடன் சென்று இல்லறம் நடத்தி மீண்டும் தன் ஊருக்கு வருகிறாள். அவ்வாறு வந்த தலைவியிடம் தோழி தலைவனுடைய நாட்டில் இனிய நீர் அல்ல என்று கூறுகிறார்களே? என்று வினவினாள். அதற்குத் தலைவி அங்குள்ள நீர் தேனை விட இனிமையானது என்றும், அது பருகுவதற்கு ஏற்ற நீர் என்றும், தலைவனின் நாட்டின் சிறப்பினை தோழியிடம் உரைக்கும்,

'அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்

தேன்மயங்கு பாலினு மினிய அவர் நாட்

டுவலைக் கூவற் கீழ

மானுண் டெஞ்சிய கலீழி நீரே'

இப்பாடல் அடிகளில் தலைவி, தலைவனின் தறுகண்மை பண்பினைச் சுட்டிக்காட்டி விளக்குவதாக அமைந்ததால் பெருமித மெய்ப்பாடு காணப்படுவது தெளிவாகிறது (Pulurkesigan, 2019).

தலைவன் வரைவதற்கு வேண்டிய ஆவணங்களைக் கொண்டு மீண்டும் வருகிறான். அவ்வாறு வந்த தலைவனைக் கண்டு தோழி பெரும் மகிழ்ச்சி கொள்வதாக அமைந்த,

'குன்றக் குறவன் சார்ந்த நறும்புகை

தேன்கமழ் விலம்பின் வரையகங் கமழுங்

கானக நாடன் வரையின்

மன்றறு முடையவன் கொறோழி யாயே'

இப்பாடல் தலைவனின் துணிச்சலையும், தறுகண்மையும் வெளிக்காட்டி பெருமித மெய்ப்பாடு தோன்றப் படைக்கப்பட்டுள்ளது (Pulurkesigan, 2019).

தலைவன் தலைவியை மணம் செய்து கொள்ளும் பொருட்டு தம் சுற்றத்தாரை தலைவியின் இல்லத்திற்கு அனுப்பி வைக்கின்றான். தலைவியின் சுற்றத்தார் மகள் மறுத்தனர். இதனால் தலைவிக்கு வருத்தம் தோன்றுகிறது. தோழி தலைவியைப் பார்த்து தலைவன் உன் பால் மிகுந்த அன்பு வைத்துள்ளான். எனவே அவன் உன்னுடைய சுற்றத்தாரை வயப்படுத்தி விரைவில் உன்னை மணம் செய்து கொள்வான் என்று தலைவனின் தறுகண்மை பண்பை விளக்கி பெருமிதம் மெய்ப்பாடு தோன்ற

'குன்றக் குறவன் காதன் மடமகள்

மன்ற வேங்கை மலர்சில கொண்டு

மறையுறை கடவுள் குனமுதல் வழுத்திற்

தேமபலிச் செய்த வீர்நறுங் கையன்

மலர்ந்த காந்த னாறிக்

கவிழ்ந்து கண்ணளெம் மணங்கி யோளே'

இப்பாடலை கபிலர் பதிவு செய்கிறார் (Pulurkesigan, 2019).

## வெகுளி என்னும் மெய்ப்பாடு

உறுப்புகளை அறுத்தலால் தோன்றும் சினமும், இழிவான குடும்பத்தால் அல்லது கீழான ஒழுக்கம் கொண்டவரால் வரும் சினமும், ஒரு கோல் கொண்டு அடித்தலால் வரும் கோபமும், ஒருவரைக் கொல்லுதலால் வரும் கோபமும் தலையாய வெகுளியாக குறிக்கப்படுகிறது என்பதனை,

"உறுப்பறை குடிகோள் அலை கொலை என்ற

வெறுப்ப வந்த வெகுளி நான்கே"

என்ற தொல்காப்பிய நூற்பா மூலம் அறிய முடிகிறது (Ilampuranar, 2005).

## குடிகோளால் வரும் வெகுளி

குடிகோள் என்பதற்கு “சூழ்ச்சி செய்து குடியை கெடுக்கை” என்று கழக அகராதியும் (Kalaga Pulavar Kulu, 2010), “பிறரது குடியிருப்பும் அவருடைய சுற்றத்தார்க்கு கேடு சூழ்தல்” (Vellaivaranan, 1986) என்று வெள்ளைவாரணாரும், “கீழ்வாரை நலிதல்” என்று இளம்பூரணரும் விளக்கம் தருகின்றனர் (Ilampuranar, 2005).

பரத்தையிடம் சென்றதால் தலைவன் கீழ் மக்களில் ஒருவனாக ஆகிவிட்டான் என்றும், அவன் குடிப்பிறப்பு தாழ்ந்து போய்விட்டது என்றும், தலைவி சினம் கொள்வதாக அமைந்த,

‘புலிகொல் பெண்பாற் பூவரிக் குருளை

வளைவெண் மருப்பிற் புரக்குங்

குன்றுகெழு நாடன் மறந்தனன்

பொன்போற் புதல்வனோ டென்னீர்தோனே’

இப்பாடல் அடிகளை ஆராயுங்கால் குடிப்பிறப்பு தாழ்ந்து போவதால் வந்த வெகுளித் தன்மையைப் புலப்படுத்துவதாக அமைகின்றது (Pulurkesigan, 2019).

## உவகை என்னும் மெய்ப்பாடு

“உவகைச்சுவை இன்ப நுகர்ச்சி பிறரைத் துன்புறுத்தி அடையும் மகிழ்ச்சியில்லாத இயல்பான தெறிப்பட்ட மகிழ்ச்சி” என்று உவகை மெய்ப்பாட்டிற்கு விளக்கம் தருகிறார் (Ilampuranar, 2010).

“செல்வம் புலனே புணர்வு விளையாட்டென

அல்லல் நீத்த உவகை நான்கே.”

என்ற இந்நூற்பாவை ஆராயுங்கால் அகத்தை மகிழ்விக்கும் செல்வம், ஐம்புலன்களால் வரும் உவகை, பெண்களைப் புணர்வதால் வரும் உவகை, விளையாட்டின் காரணமாகத் தோன்றும் உவகை என்று உவகை வரும் இடங்களைப் பதிவு செய்துள்ளதை அறியமுடிகிறது (Ilampuranar, 2005).

## புணர்வு அடிப்படையில் தோன்றும் உவகை

‘மீமிசை நன்னாட் டவர் வரின்

யானுயிர் வாழ்தல் கூடு மன்னாய்’

என்ற இப்பாடல் வரிகளை ஆராயுங்கால் களவு வாழ்க்கையில் அலர் தோன்றுகிறது (Pulurkesigan, 2019). இதனால் தலைவனிடம் தோழி, விரைவில் தலைவியைத் திருமணம் செய்து கொள் என வலியுறுத்துகிறாள். இதனால் தலைவன் தலைவியைத் திருமணம் செய்ய விரைவில் வருவேன் என்று கூறும்போது தலைவிக்கு உவகை தோன்றுவதாக இப்பாடல் அமைகிறது.

## முடிவுரை

மெய்ப்பாடுகள் அக இலக்கியங்களில் மாந்தர்களின் உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தும் அடிப்படை உத்திகளாக விளங்குகின்றன. அவற்றுள் ஐங்குறுநூறு குறிஞ்சித் திணைப் பாடல்களில் உள்ள தலைவிக் கூற்று பாடல்களில் அழுகை, இளிவரல், அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை போன்ற மெய்ப்பாடுகள் மட்டும் காணப்படுவதை இவ்வாய்வின் மூலம் அறிய முடிகின்றது.

## References

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram, Saratha Pathipagam, Chennai, India.

Kalaga Pulavar Kulu, (2010) Kalaga Tamil Agarathi, Thirunalveli, Thenenthiya Siva Sithantha Norpathipagam Kalagam, Chennai, India.

Perasiriyar, (2017) Tholkapiyam Porulathigaram, Perasiriyar Urai, Amaravathi Pathipagam, Chennai, India.

Pulurkesigan, (2019) Saratha Pathipagam, Santhi Adugagam, Chennai, India.

Sundaramorrthi, K. (2013) Thandialangaram, Uma Pathipagam, Chennai, India.

Vellaivaranan, K. (1986), Tholkappiyam Meippatiyal Uraivalam, Madurai Kamarajar University, Madurai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License